
# இனிய தீபாவளி வாழ்த்துக்கள்! 04-11-2021



ஒளியும் ஒலியுமாய் உலகம் பிறந்திட,
ஒவ்வொரு கோளும் தானாய் நிறைந்திட,
செவ்விய அறிவன் சீரிய நிலையாய்;
செம்மை நிறைந்த வாழ்க்கைப் பயணம்!

தம்மைத் தாமே தரணியில் நிலைக்க,
திரண்ட மனத்தில் தேடிய விழாக்கள்!
பரந்த ஒளியோ பாரினில் நிலையாம்!
திறந்த அறிவோ தெய்வம் செய்து,



மறவாது இயற்கையை மானுடம் பேணும்!
மனத்தில் பொங்கும் ஒளியின் வரிசையாய்!
தினமிதில் செய்து தீபாவளி என்றனரோ!
கனமாய் சிலவாய்க் கதைகள் பிறந்து,

களத்தில் நிலையோ வேறாய் நின்றது!
உளத்தில் இங்கோ நரகச் சதுர்த்தி!
உருக்கொண்டு புத்தாடை பலகாரங்கள்!
கருவாய் நிறையும் மத்தாப்பு வெடிகள்!



தருவாய் தீபத் திருநாள் தன்னை,
தமிழர் செய்வார் கார்த்திகைத் திங்கள்!
அமிழ்தாய் ஒளியின் அழகுகள் நிறையும்!
அடுத்து அங்கே சிவனுக்குச் சொக்கப்பனை!

எழுந்து ஒளியுடன் விண்ணை முட்டும்!
இளையரும் சிறாரும் தீப்பொரி சுற்றுவர்!
இணையில் இதனை முருகனுக்கு என்பர்!
இயற்கையை வணங்கி இன்முகம் செய்த,



மயக்கமில் தமிழனின் மருவிலாச் சிந்தையை;
மறுபடி மறுபடி ஒவ்வொரு விழாவிலும்,
மகுடம் சூட்டி அவன்நிலை செப்பும்!
தகுதியால் யாவரும் ஒன்றே யென்னும்,

தன்மையில் அனைவரும் மகிழ்ந்திட விழாக்கள்!
தமிழனின் செயல்கள் யாவும் நிறையே!
தன்னுடன் நிறையும் உயிர்கள் அனைத்தும்;
பொன்னாய் மதிக்கும் தன்மையில் உயர்ந்து,



மன்னும் நிறைசீர் கலைகள் யாவும்,
மகிழ்வுடன் போற்ற ஒவ்வொரு விழாவும்!
மனத்தால் மனத்தை மகிழ்ந்திடச் செய்வோம்!
இனியதாய் யாவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்!

**கவிவளவன்** ஆகிய **கு.ப. அசோகன்** - **03-11-2021 (12.35 ஏ.எம்)**